BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# சங்க இலக்கியம் காட்டும் கைம்மைபெண்களின் நிலை

**முனைவர் கோ. செந்தில் செல்வி**

தமிழ்த்துறைத்தலைவர், அக்சிலியம் கல்லூரி, காட்பாடி வேலூர்-6, தமிழ்நாடு, இந்தியா.

E.mail: sssenthil614@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் தமிழர் பண்பாடு, சமூக அமைப்பு, அரசியல், பொருளாதாரம் மற்றும் மகளிர் வாழ்வியல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் அரிய இலக்கியக் கருவூலங்களாகும். அவற்றுள் கைம்பெண்களின் நிலை குறிப்பிடத்தக்கதாகும். கணவனை இழந்த பெண்களின் துயரம், சமூகக் கட்டுப்பாடுகள், பொருளாதாரச் சிக்கல்கள், கைம்மை நோன்பு, கற்புக் கோட்பாடு ஆகியவை சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளன. குறிப்பாக புறநானூற்றுப் பாடல்கள் கைம்பெண்களின் வாழ்க்கையை வரலாற்று ஆவணமாக எடுத்துக்காட்டுகின்றன. இக்கட்டுரை சங்க இலக்கியங்களில் இடம்பெறும் கைம்பெண்கள் குறித்த செய்திகளை ஆராய்ந்து அவர்களின் சமூக மற்றும் பண்பாட்டு நிலைகளை விளக்குகிறது.

**திறவுச்சொற்கள்**

சங்க இலக்கியம், கைம்மைபெண்கள், கைம்மை நோன்பு, புறநானூறு, மகளிர் வாழ்வியல்.

## அறிமுகம்

தமிழர் நாகரிகத்தின் தொன்மையை வெளிப்படுத்தும் சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. சங்ககாலத்தில் குடும்ப அமைப்பு முக்கியமான சமூக நிறுவனமாக இருந்தது. குடும்பத்தின் மையமாகக் கருதப்பட்ட கணவனை இழந்த பெண்கள் பல்வேறு துயரங்களையும் சமூகக் கட்டுப்பாடுகளையும் எதிர்கொண்டனர். அவர்களின் வாழ்க்கை முறை அக்கால சமூகத்தின் பெண்கள் பற்றிய பார்வையை அறிய உதவுகிறது. இந்நிலையில் கணவனை இழந்த பெண் சமூகத்திலும் குடும்பத்திலும் பல்வேறு மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

சங்க இலக்கியங்கள் இந்நிலையை நுணுக்கமாகப் பதிவு செய்துள்ளன. கணவனை இழந்த பெண்களின் வாழ்க்கையைப் புரிந்துகொள்வது சங்ககாலப் பெண்களின் சமூக நிலையை அறிய உதவுகிறது.

## கைம்பெண் - வரையறை

கணவனை இழந்த பெண் "கைம்பெண்" எனப்படுகிறாள். சங்க இலக்கியங்களில் "உயவற் பெண்டிர்", "பருத்திப் பெண்டிர்" என்ற பெயர்களும் காணப்படுகின்றன. தொல்காப்பியம் பெண்களின் வாழ்க்கை நிலைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது கைம்மை வாழ்வும் சமூக நெறிகளும் மறைமுகமாக உணர்த்தப்படுகின்றன.

சங்ககாலப் பெண்கள் திருமணத்திற்குப்பின் பிறந்த வீட்டில் பெற்றோருடன் உடனுறைந்து வாழவில்லை. கணவனுடன் இணைந்து இன்ப வாழ்வு வாழ்ந்தனர். பழங்காலத்தில் வாழ்ந்த பெண்கள் கணவரைப் பேணும் பண்புடையவர்களாக விளங்கினர். கணவனை இழந்த பெண்களைக் கைம்பெண்கள் என்று வழங்கினர். கணவன் இறந்த பின்னர் பெண்கள் கணவனுடன் தங்கள் உயிரையும் மாய்த்துக் கொண்டனர். அதைவிடப் பெண்கள் கைமை நோன்பு நோற்று தமது வாழ்க்கையைக் கழித்தனர் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**சங்க இலக்கியங்களில் கைம்பெண்களின் நிலை**

சங்க காலத்தில் கணவனை இழந்த பெண்களின் வாழ்க்கை மிகவும் துயரமானதாக இருந்தது. அவர்கள் அணிகலன்களைத் துறந்து, எளிய வாழ்க்கையை மேற்கொண்டனர். தலையை மழித்தல், வெள்ளை ஆடை அணிதல், சுவையான உணவுகளைத் தவிர்த்தல் போன்ற நடைமுறைகள் இருந்ததைப் பாடல்கள் உணர்த்துகின்றன. புறநானூறு பாடல்களில் பல இடங்களில் வீரமரணம் அடைந்த கணவர்களை எண்ணி வருந்தும் மனைவியரின் துயரம் வெளிப்படுகிறது. கணவனை இழந்த பெண்கள் சமூகத்தில் தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

**கைம்மை நோன்பு**

திருமணத்திற்கு முன்பிருந்தே பூச்சூடி வளையல் அணிந்து, நல் உணவு உண்ட மகளிர் கணவரை இழந்த பிறகு அனைத்தையும் துறந்தவர் ஆகின்றனர் பஞ்சனையிலோ நல்ல படுக்கையியலோ படுத்துறங்கிய மகளிர் ,பாயும் இல்லாத சிறிய கற்கள் நிறைந்த வெற்றுத்தரையில் படுத்து உறங்கியிருந்தனர் .தாளிப்புடன் கூடிய நல்ல கொழுவிய சுவையுடனான அடிசிலைத் தவிர்த்துநன்று நெய்யின்றி நீர்ச்சோற்றையும் புளி கூட்டப்பட்ட வேளைக்கீரையினையும் உணவாக கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் அவ்விடத்து உண்டான புல்லரிசியினையே தம் உணவாக உட்கொண்டனர். இதனை ,

*“ நறுநெய் தீண்டா*
*துடையிடைக் கிடந்த கைப்பிழி பிண்டம்*
*வெள்ளெட்டு சாந்தோடு புளிப்பெய் தட்ட*
*வேளை வெந்தை வல்சியாகப்*
*பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்”*

என்ற பாடல் அடிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

*“பெருவளக் கொழுநன்*
*மாய்ந்தெனப் பொழுது மறுத்*
*தின்னா வைகலுண்ணும்*
*அல்லிப் படூஉம் புல்லா யினவே”*

கணவனை இழந்த பெண்ணின் நிலையும், கைம்மை நோன்பு நோன்ற, பெண்களை தொழிகழி மகளிர், ஆளில் பெண்டிர் எனவும் வழங்கினர்.

**கைம்மை கோலம்**

**வளையல்களைக் களைதல்**

பெண்களின் ஒப்பனை கணவன் இறந்த நிலையில் சிதைவு பெற்று கைம்மைக்குரிய தோற்றத்தை உருவாக்குகிறது. கணவனை இழந்து வாழும் பெண்கள் மங்கலப் பொருள்களை நீக்கி வாழ வேண்டும். வளையல் அணிதல் கூடாது என்று சமுதாயம் வலியுறுத்தியது. இதனை,

*“வாழைப் பூவின் வளைமுறி சிதற”*
*(புறம், 237:10-12)*

*“தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடி”*
*(புறம்,238:5-7)*

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. வெளிமான் என்ற மன்னன் இறக்க அவனுடைய உரிமை மகளிர் தங்கள் கைகளில் அணிந்திருந்த வளையல்களை உடைத்தெறிந்தனர். இதனால் அவர்களது கைகளின் கவின் குறைந்து பார்ப்பதற்கு வெறுமையாகக் காட்சியளித்தன என்று பெருஞ்சித்திரனார் குறிப்பிடுகின்றார்.

*“பாணர் சென்னியும்வண்டு சென்று ஊதா*
*விறலியர் முன் கையும் பொலியா*
*இரவல் மக்களும்” (புறம், 244)*

கணவனை இழந்த பெண்கள் வளையல் களைவது தமிழர் வழக்கம். அங்ஙனமே வள்ளல் ஒருவன் இறந்தபோது ஆடிப் பிழைக்கும் பெண் கலைஞர்களாகிய விறலியர்கள் கைகளிலும் வளையல் இல்லை என்னும் செய்தி புறநானூறு வழி அறிய முடிகிறது.

**அணிகலன்களைக் களைதல்**

கணவனுடன் வாழ்கின்ற பெண்களே பல்வேறு அணிகலன்களை அணிந்திருப்பர். கணவனை இழந்த பெண்கள் எந்தவிதமான அணிகலன்களையும் அணிதல் கூடாது. கரிகாற் பெருவளத்தான் மறைந்தான். அவனால் ஆதரிக்கப்பெற்ற அனைவரும் வருந்தினர். அவனது உரிமை மகளிர் தாங்கள் அணிந்திருந்த அனைத்து அணிகலன்களையும் களைந்து பெருந் துயருற்றனர். இதனை அவனது இறப்பினைக் கண்டு கலங்கிய கருங்குழலாதனார் எனும் புலவர்,

*“பூ வாட் கோவலர் பூவுடன் உதிரக்*
*கொய்து கட்டுஅழித்த வேங்கையின்*
*மெல்லியல் மகளிரும் இழை களைந்தனரே*
*(புறம், 224:15-17)*

என்று துயருற்றுப் பாடுகின்றார்.

கணவனை இழந்த பெண்கள் அணிந்திருந்த வளையல்கள், பூக்கள், ஆபரணங்கள் ஆகியவற்றைக் களைந்து துயர வாழ்க்கை மேற்கொண்டனர்.இதனை,

*"கழிகல மகளிர்"( புறம், 224)*

என்ற தொடர் இடம்பெறுகிறது. இதில் "கழிகல" என்பது அணிகலன்களை நீக்கிய பெண்களைக் குறிக்கிறது. கணவனை இழந்த பின் அலங்கார வாழ்க்கையைத் துறந்த நிலையை இது உணர்த்துகிறது.

**கூந்தல் களைதல்**

பெண்களுக்கு அழகு தருவது கூந்தல். அக்கூந்தலிலேதான் பெண்கள் மலரணிந்து மகிழ்ந்தனர். கணவன் இறந்து படவே தமக்கு அழகு தந்த கூந்தலைப் பெண்கள் களைந்தார்கள். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனார் பாடியபோது,

*“மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்*
*ஒள்நுதல் மகளிர் கைம்மைகூர*
*அவிர் அறல் கடுக்கும் அம்மென்*
*குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே”*

*(புறம், 25:10-14)*

என்று பாடுகின்றார். நெடுஞ்செழியனே நீ படையெடுத்துப் பகைவரை அழிப்பதால், பகைவர்களது மனைவியர் கைம்மையை மேற்கொள்ள வேண்டி விளங்கித் தோன்றும் ஆற்றின் கரிய தலைமுடியினைக் களைந்தார்கள் என்று கைம்பெண்கள் கூந்தலைக் களைந்ததை எடுத்துரைக்கின்றார்.

**கைம்பெண்களின் உணவும் அவர்களது நிலையும்**

கணவனை இழந்த பெண்கள் மிகவும் துன்பச் சூழலில் வாழ்ந்தனர். அவர்கள் தங்களை அழகுறுத்திக் கொள்வதும் நல்லுணவு உண்பதும் சமுதாயத்தால் மறுக்கப்பட்டது. அவர்கள் மிகுந்த இழிந்த வாழ்வு வாழ்ந்தனர். தமது கணவன் இருந்தபோது மகிழ்வுடன் வாழ்ந்த மகளிர் கணவன் இறந்த பின்னர் அனைத்து இன்பங்களையும் துறந்து வாழ்ந்தனர். இதனை,

*“குய்குரல் மலிந்த கொழுந்துவை அடிசில்*
*இரவலர்த் தடுத்த வாயில், புரவலர்*
*கண்ணீர்த் தடுத்த தண்நறும் பந்தர்*
*கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி*
*அல்லி உணவின் மனைவியொடு இனியே*
*புல்லென்றனையால் வளம் கெழுதிருநகர்*
*வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்*
*முனிந்தலைப் புதல்வர் தந்தை*
*தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே”*

*(புறம், 250:3-4)*

என்ற தாயங்கண்ணியாரின் பாடல் தெளிவுறுத்துகின்றது.

**கைம்பெண்களின் அழகிழந்த நிலை**

கணவனை இழந்த பெண்கள் கூந்தல், வளையல், அணிகள் ஆகியவற்றை இழந்து பொலிவிழந்து காணப்பட்டனர். அவர்களின் அழகற்ற நிலையானது அழகற்ற இல்லம்போன்று காணப்பட்டன. இத்தகைய கைம்பெண்களின் அவல நிலையை,

*“நிரை இவன் தந்து, நடுகல் ஆகிய*
*வென்வேல் விடலை இன்மையின் புலம்பி*
*கொய்ம் மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய*
*கழிகல மகடூஉப் போலப்*
*புல்லென்றனையால் பல்லணி இழந்தே”*

*(புறம், 262)*

என்று வாள்போரில் வீழ்ந்தவனைப் பார்த்து யாழ்ப்பாணர் வருந்தி ஆவூர் மூலங்கிழார் பாடுகின்றார். இப்பாடல் கைம்பெண்களின் வாழ்க்கைநிலையை தெளிவுறுத்தும் பாடலாக அமைந்துள்ளது.

**கைம்மைத் துன்பத்தின் மூன்று நிலைகள்**

ஒப்பனை நீக்கம், உணவு நீக்கம், பழக்கநீக்கம் என்ற கைம்மைத் துன்பத்தின் மூன்று நிலைகள் காணப்படுகின்றன. வளை, தொடி, இழை ஆகியன கணவன் இறந்த நிலையில் களையப்பட்டிருக்கின்றன. பெருஞ்சித்திரனார், வெளிமான் என்னும் வள்ளல் துஞ்சிய போது, வருந்திப் பாடிய பாடலில் இச்செய்தி வெளிப்படுகின்றது. அறனில்லாத கூற்றம் வெளிமான் உயிரைக் கவர்ந்தமையால் அவனது மகளிர் தம் மார்பில் அறைந்து கொள்வதையும் கைம்மைக் கோலத்தின் அறிகுறியாக அவர் கைவளையல்களை உடைப்பதையும் அவை வாழைப் பூப்போல சிதறிக்கிடப்பதையும் பாடியுள்ளார் (புறம், 237: 7-14). கைம்மை மகளிர் தம் கூந்தலை நீக்கிய செய்தியைப் புறநானூற்றில் நான்கு பாடல்கள் எடுத்து இயம்புகின்றன (புறம், 25, 250, 261, 280). திருமணத்திற்கு முன்பும், மணநிலையிலும், பெண்கள் பூச்சூடியிருக்கின்றனர்.

கைம்மையில் கூந்தல் நீக்கத்துடன் மலர் நீக்கமும் இயல்பாகவே நிகழ்ந்துள்ளது. இது பழந்தமிழகத்தின் சமுதாய நிலையையும் பெண்களின் பெருந்துயரையும் விளக்குவதாக உள்ளது.

**கைம்பெண்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள்**

தமிழகத்தில் கணவனை இழந்த பெண்டிர் கைம்மை மகளிர் என அழைக்கப்பட்டனர். கைம்மை நிலை என்பது தந்தைவழிச் சமுதாயத்தின் ஒருதார மணமுறை என்ற சமூக அமைப்பில் உருவாக்கப்பட்டது. கணவர் இறந்தால் மனைவி இறக்க வேண்டும். ஆனால் மனைவி இறந்தால் கணவர் இறக்க வேண்டியதில்லை. நற்றிணை, புறநானூறு ஆகிய நூல்களில் மட்டுமே கைம்மை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கணவனை இழந்த பெண்களை,1. ஆளில் பெண்டிர் (நற். 353) 2. கழிகல மகளிர் (புறம். 280) 3. பருத்திப்பெண்டிர் (புறம்.125) 4. தொடிகழி மகளிர் (புறம். 238) 5. கைம்மை (புறம்.125, 261) 6. படிவமகளிர் (நற். 273) 7. உயவற்மகளிர் (புறம். 246) என்ற பெயர்களில் சங்க இலக்கியங்கள் வழங்கியுள்ளமை

**புறநானூற்றில் கைம்பெண்கள்**

கைம்பெண்களின் வாழ்க்கையை விளக்கும் முதன்மையான சங்கநூல் புறநானூறு ஆகும். கணவனை இழந்த மனைவியின் துயரம்: போரில் இறந்த வீரர்களின் மனைவியர் பற்றிய செய்திகள் பல பெருங்கோப்பெண்டு தனது கணவன் பூதப்பாண்டியன் இறந்தபின் கூறும் வரிகள்,

*"பல்சான்றீரே! பல்சான்றீரே!*
*செல்கெனச் சொல்லாது ஒழிகென*
*விலக்கும் பொல்லாச் சூழ்ச்சிப்*
*பல்சான்றீரே!"(புறம், 246)*

இவ்வரிகள் கணவனை இழந்த மனைவியின் ஆழ்ந்த மனவேதனையையும் உயிர்வாழ விருப்பமின்மையையும் வெளிப்படுத்துகின்றன.

**அணிகலன்களைத் துறத்தல்**

கணவனை இழந்த பெண்கள் அணிந்திருந்த வளையல்கள், பூக்கள், ஆபரணங்கள் ஆகியவற்றைக் களைந்து துயர வாழ்க்கை மேற்கொண்டனர்.இதனை,

*"கழிகல மகளிர்"( புறம், 224)*

என்ற தொடர் இடம்பெறுகிறது. இதில் "கழிகல" என்பது அணிகலன்களை நீக்கிய பெண்களைக் குறிக்கிறது.

கணவனை இழந்த பின் அலங்கார வாழ்க்கையைத் துறந்த நிலையை இது உணர்த்துகிறது.

**சமூகப் பார்வை**

சங்க சமுதாயம் கைம்பெண்களை இரக்கத்துடன் பார்த்தாலும், அவர்களின் வாழ்க்கையில் பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. குடும்ப மற்றும் சமூக மரபுகள் காரணமாக அவர்கள் சுதந்திரமான வாழ்க்கையை வாழ முடியாத சூழல் நிலவியது. இருப்பினும், சில இடங்களில் கைம்பெண்கள் தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொண்டதற்கான சான்றுகளும் காணப்படுகின்றன.

**கைம்பெண்களின் உளவியல் நிலை**

கணவனை இழந்த பெண்களின் மனநிலையை சங்கப் புலவர்கள் ஆழமாகச் சித்தரித்துள்ளனர்.

**தனிமை**

கணவனை இழந்த பிறகு வாழ்க்கை வெறுமையாக மாறியதைப் பல பாடல்கள் காட்டுகின்றன. புறநானூறு 245-இல் கணவனை இழந்த மனைவியின் துயரம் மிக நுட்பமாக வெளிப்படுத்தப்படுகிறது. அவளது உலகமே கணவனை மையமாகக் கொண்டிருந்ததால், அவரது மறைவு வாழ்வின் அர்த்தத்தையே மாற்றிவிடுகிறது.

**உயிர்துறக்கும் எண்ணம்**

சில பெண்கள் கணவனின் இறப்பைத் தொடர்ந்து உயிர் வாழ விரும்பாத நிலையை அடைந்தனர். பெருங்கோப்பெண்டு பற்றிய புறநானூற்றுப் பாடல்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றன

**பொருளாதார நிலையில் கைம்பெண்கள்**

கணவனை இழந்த பின்னர் குடும்பப் பொறுப்பு பெண்களின் தோள்களில் விழுந்தது.

*"பருத்திப் பெண்டிர்"(புறம், 125)*

என்ற குறிப்பு காணப்படுகிறது. இது பருத்தி நூற்றுத் தொழில் செய்து வாழ்க்கை நடத்தும் கைம்பெண்களைக் குறிக்கிறது. இதன் மூலம்: கைம்பெண்கள் தொழில் புரிந்தனர். தன்னிறைவு வாழ்க்கை வாழ்ந்தனர். குடும்பத்தைப் பாதுகாத்தனர். என்பதை அறிய முடிகிறது.

**சமூகத்தில் கைம்பெண்களின் நிலை**

சங்க சமுதாயம் கைம்பெண்களை இரக்கத்துடன் அணுகிய போதிலும், பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

சமூகக் கட்டுப்பாடுகள் அலங்காரம் செய்யக்கூடாது. விழாக்களில் பங்கேற்கக்கூடாது. மகிழ்ச்சியைக் காட்டக்கூடாது. எளிமையான வாழ்க்கை வாழ வேண்டும். இக்கட்டுப்பாடுகள் பெண்களின் தனிப்பட்ட சுதந்திரத்தைக் குறைத்தன.

**கைம்பெண்களும் கற்புக் கோட்பாடும்**

சங்க சமுதாயத்தில் கற்பு பெண்களின் உயர்ந்த அறமாகக் கருதப்பட்டது. திருக்குறள் கூறுவது,

*"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மைஉண் டாகப் பெறின்" (குறள், 54)*

கணவனை இழந்த பின்னரும் அவரின் நினைவோடு வாழ்வது சமூகத்தால் உயர்வாகக் கருதப்பட்டது. கைம்மை நோன்பும் இந்தக் கற்புக் கொள்கையின் தொடர்ச்சியாக விளங்கியது.

**சங்ககாலமும் இன்றைய காலமும்**

**சங்ககாலம்**

கைம்மை நோன்பு, மறுமணம் குறைவு, பொருளாதார சார்பு, சமூகக் கட்டுப்பாடு

**நவீன காலம்**

தனிநபர் விருப்பம், மறுமணம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, பொருளாதார சுயநிறைவு, சட்ட உரிமைகள் இன்றைய சமுதாயத்தில் கைம்பெண்களின் நிலை முன்னேற்றம் அடைந்திருந்தாலும், சில பாரம்பரியக் கருத்துக்கள் இன்னும் தொடர்கின்றன.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் கைம்பெண்களின் வாழ்க்கையை வெறும் துயரச் செய்தியாக மட்டுமல்லாமல், அவர்களின் மன உறுதி, சமூகப் போராட்டம், பொருளாதாரச் சவால்கள் மற்றும் பண்பாட்டு நிலைகளை எடுத்துக்காட்டும் வரலாற்று ஆவணங்களாகப் பதிவு செய்துள்ளன. புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெறும் கைம்பெண்களின் வாழ்க்கைச் செய்திகள் சங்ககால சமூக அமைப்பையும் பெண்களின் நிலையும் அறிய உதவும் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் அனுபவங்களை இலக்கியம் வழியாக வெளிப்படுத்திய சங்கப் புலவர்களின் சமூகப் பார்வை பாராட்டத்தக்கது.

**துணை நூற்பட்டியல்**


1. அறவாணன். க.ப., தமிழர் சமூக வரலாறு. தமிழ்க் கோட்டம், சென்னை, 1994.
2. சக்திவேல். சு., சங்ககால மகளிர் வாழ்வியல். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
3. சாமிநாதையர், உ.வே. (உ.ஆ.). புறநானூறு. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.
4. நச்சினார்க்கினியர் (உரை). தொல்காப்பியம். கழக வெளியீடு, சென்னை, 2006.
5. வரதராசனார். மு., சங்க இலக்கிய ஆய்வு. சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1972.